ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2313/07 - 2023 ජනවාරි මස 02 වැනි සඳුදා - 2023.01.02
*2313/07 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*எல்.டீ. பீ. 11/1980 (36)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022, திசெம்பர் 13.*

**ஒழுங்குவிதிகள்**

1\. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் உணவு (சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா வலுவூட்டல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2\. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, கோதுமை மா ஆனது, துப்புரவு செய்யப்பட்ட தானியமான ரிடிகம் குயுமேசிடிவம எல். அல்லது ரிடிகம் கம்பாக்டம் கோஸ்டில் இருந்து அரைத்து மற்றும் போல்ட் செய்வதன் மூலம் பெறப்பட்ட துப்பரவாக்கப்பட்ட சிறந்த உற்பத்திப் பொருளானது முழுக் கோதுமை மா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவை உள்ளடக்குவதுடன் சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவானது முழுக் கோதுமை மாவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

3\. சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவினை உள்நாட்டு நுகர்வு அல்லது பாண் உற்பத்தி ஆகிய சில்லறை விற்பனைக்கு உற்பத்தி செய்யும் ஆள் ஒருவர் அத்தகைய சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா போலிக் அசிட் மற்றும் இரும்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது என வலுப்படுத்த வேண்டுமென்பதுடன், அத்தகைய வலுப்படுத்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா ஆனது-

(அ) போலிக் அசிட் 2-3 மிகி/கிகி இடையில் ;
(ஆ) அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு சோடியம் அயன் எதைலீன்டைஅமீன்டெட்ரா அசிரேட் (NaFeEDTA) அல்லது பெரூஸ் பியுமரேட் அல்லது பெரூஸ் சல்பேட் ஆக அயன்,

என்பவற்றை உள்ளடக்கியுள்ளது என உறுதி செய்தல் வேண்டும்.

1A - PG 6141 — 3006 (2023/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவினை, உள்நாட்டு நுகர்வுக்கான சில்லறை விற்பனைக்கு அல்லது பாண் உற்பத்திக்கு உற்பத்தி செய்யும் ஆள் ஒருவர் அந்த அவ்வாறான சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா எண்பது சதவீதத்திற்கு (80%) குறையாத பிரித்தெடுப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது என உறுதி செய்தல் வேண்டும்.

5. சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவினை, பாண் உற்பத்தி தவிர்ந்த ஏனைய எந்தவொரு வியாபாரத்திற்காகவும் விநியோகிக்கும் நோக்கத்துக்காக உற்பத்தி செய்யும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆள் ஒருவர் அத்தகைய சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா எழுபத்திநான்கு சதவீதத்திற்கு (74%) குறையாத பிரித்தெடுப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது என உறுதி செய்தல் வேண்டும்.

**அட்டவணை**

| *இரும்பு வகை* | *மட்டம்* |
|---|---|
| சோடியம் அயன் எதைலீன்டைஅமீன்டெட்ராஅசிரேட் (NaFeEDTA) | 35-40 மிகி/கிகி |
| பெரூஸ் பியுமரேட் | 55-60 மிகி/கிகி |
| பெரூஸ் சல்பேட் | 55-60 மிகி/கிகி |

EOG *01-0002*